Registered as a Newspaper in Ceylon

விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

மலர் 7 இதழ் 102

National Tamil Daily தேசிய தினசரி

(24-5-65)

விசுவாவசு வைகாசி 11 முஹர்ரம் பிறை 22 திங்கட்கிழமை

திருப்பதி வெங்கடேஸ்வரருக்கு

# தமிழ்நாட்டு சாது அளித்த ரூ. $2\frac{1}{2}$ கோடி வைரக்கல்

ஹைதராபாத், மே 23

திருப்பதி வெங்கடேஸ்வர சுவாமி கோவிலுக்கு 2 விலை உயர்ந்த வைரக் கற்கள் கிடைத்திருப்பதாயும், தமிழ் நாட்டைச் சேர்ந்த ஒரு சாது இதை அளித்திருப்பதாயும் ஆந்திர முதன் மந்திரி திரு. பிரம்மானந்தரெட்டி நிருபர்களிடம் கூறினர்.

இந்த வைரங்கள் 650 கிராம் எடைக்கு மேல் இருப்பதாயும், அதன் மதிப்பு ரூபா இரண்டரைக் கோடிக்குமேல் இருக்கும் என்றும் முதன் மந்திரி கூறினர். இந்தக் கற்களை திருப்பதி தேவஸ்தான உண்டியலில் அந்தச்சாது போட்டிருந்தார் என்ற செய்தி ஏற்கனவே வெளிவந்திருந்தது.

முதன் மந்திரி இந்தச் செய்தியை இப்போது ஊர்ஜிதம் செய்திருக்கிருர்.

## இரண்டாவது சதிவழக்கு இன்று ஆரம்பமாகிறது

பம்பலப்பிட்டி, ஞாயிறு

இரண்டாவது சதிவழக்கு 'பினாக்ஸ்ராப்' தெருவிலுள்ள சுப்ரீம் கோர்ட்டில் நாளை திங்கட் கிழமை காலை பத்துமணிக்கு ஆரம்பமாகும்.

கேணல் ஜே. எச். வி. டி அல்விஸும் கேணல் ரெஜி அபயசிங்காவும் இதை வழக்கில் பிரதிவாதிகளாகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளார்கள்.

1962-ம் ஆண்டு ஜனவரிமாதம் 27-ந் திகதி கொழும்பு, சுதுவெல்ல, அம்பலாங்கொடை, காலி, மாத்தறை ஆகிய இடங்களிலும் வேறு இடங்களிலும் வேறு நபர்களின் உதவியுடன் சதி முயற்சிமூலம் சட்டவிரோதமான முறையில், மக்களால் தெரிவு செய்யப்பட்ட இலங்கை அரசாங்கத்தை கவிழ்க்க திட்டம் தயாரித்ததாக இவர்கள்மேல் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இந்த இரு பிரதிவாதிகளும் முன்னர் சதிவழக்கில் முடிக்குரிய சாட்சிகளாக இருந்தார்கள்.

நீதியரசர் ஜி. பி. ஏ. சில்வாவும், நீதியரசர் வி. மாணிக்கவாசகரும், நீதியரசர் ஏ. சி. அலஸும் இந்த வழக்கை விசாரணை செய்வார்கள்.

முடிக்குரிய தரப்பில் உதவி சொலிசிட்டர் திரு. அனங்க பெரராவும், முடிக்குரிய சிரேஷ்ட வழக்கறிஞர் திரு. பிரேமரத்தின, திரு. விஜயசுந்தரா, திரு. புள்ளநாயகம், திரு. திருச்செல்வம், திரு. வயிட் முதலியோர் ஆஜராவார்கள்.

பிரதிவாதிகள் சார்பில் திரு. ஜி. ஈ. சிட்டி கியூ. ஸி., திரு. ஆர். ஏ. கன்னங்கரா, திரு. ஓர்லூவ், திரு. சேரம் ஆகியோர் ஆஜராவார்கள்.

## பாக். விமானங்கள் 34 தடவை அத்துமீறின

### இந்தியா குற்றச்சாட்டு

புதுடில்லி, மே 23

இந்திய விமானங்கள் பாகிஸ்தான் வானப் பிராந்தியத்தில் அத்துமீறியதாக, பாகிஸ்தான் தெரிவித்துள்ள குற்றச்சாட்டை இந்தியா நிராகரித்திருக்கிறது.

ஆனால் ஏப்ரல் 1-ம் திகதியிலிருந்து 34 தடவைகள் பாகிஸ்தான் விமானங்கள் இந்திய வானப்பிராந்தியத்தின்மீது அத்துமீறிப் பறந்ததாக பதிலுக்கு குற்றஞ்சாட்டப்பட்டிருக்கிறது.

பாகிஸ்தானின் புகார்பற்றி விசாரணை செய்ததில் ஒரு தடவைகூட இந்திய விமானங்கள் அத்துமீறவில்லை என கண்டுபிடிக்கப் பட்டிருப்பதாயும் அதிகாரிகள் கூறினர்.

அந்த சமயம் கிழக்கு பாகிஸ்தான் எல்லையிலுள்ள தஹாகிராம் என்ற இந்திய திட்டுப் பகுதியில் பாகிஸ்தான் பொலிசார் ஹிந்துக்களை கொடுமைப்படுத்துவதாகக் குற்றஞ்சாட்டப்பட்டிருக்கிறது.

## மலைநாட்டுப் பகுதியில் ரயில்சேவை துண்டிப்பு

### நாவலப்பிட்டி – ஹட்டனுக்கிடையே பஸ் மூலம் போக்குவரத்து ஆரம்பம்

கொழும்பு, ஞாயிறு

நாவலப்பிட்டிக்கும், ஹட்டனுக்குமிடையே வெள்ளம் காரணமாகவும், பாதை சீர்குலைவு காரணமாகவும் நேற்று தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருந்த மலைநாட்டுப் புகையிரத சேவை இப்போது இரு நகரங்களுக்குமிடையே பஸ் மூலம் தொடர்பு கொள்ளப்பட்டிருப்பதாய் அறிவிக்கப்படுகிறது.

பிரதான பாதை மீண்டும் சகஜநிலையை அடையத் தாமதம் ஏற்படலாம் எனப்புகையிரத சேவைப்பகுதி அறிவித்துள்ளது. தற்போது கொழும்பிலிருந்து நாவலப்பிட்டிக்கும், பின் ஹட்டனிலிருந்து பதுளைக்கும் ரயில் சேவை நடைபெற்றுவருகிறது.

நாவலப்பிட்டியிலிருந்து ஹட்டனுக்கு பகலில் மட்டுமே பஸ் சேவை இருக்கும் என்றும் அறிவிக்கப்பட்டது.

## உத்தியோகத்தர் அவதி!

வவுனியா, ஞாயிறு

அண்மையில் வீசிய சூறவளியின் காரணமாக வவுனியா கச்சேரியில் உள்ள இரு மலசலகூடங்களும் பலத்த சேதமடைந்தன. இதுவரை காலமும் சேதமடைந்த இரு மலசலகூடங்களும் திருத்தி அமைக்கப்படவில்லை. இதனுல் வவுனியாக் கச்சேரியில் கடமையாற்றும் அரசாங்க ஊழியர்கள் மல, சலம் கழிப்பதற்கு மிகவும் கஷ்டப்படுகிறுர்கள். ஆனுல் இதுகாலவரை அவர்கள் இவ்விரு மல, சலகூடங்களைத் திருத்துமாறு பல கடிதங்கள் எழுதியும் இதுவரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்று அவர்கள் அறிவித்துள்ளனர்.

# 350 நிவாரண உதவி வேலைமுகாம்கள்

## அநுராதபுர மாவட்டத்தில் அமைக்கப்பட்டுள்ளன

வவுனியா, ஞாயிறு

சூறவளியினுல் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண வேலை முகாம்கள் அமைத்து அவர்களுக்கு உதவி அளிப்பதில் அநுராதபுர மாவட்டம் முன்னிற்கிறது. இதுவரை 350 நிவாரண வேலை முகாம்கள் அமைக்கப்பட்டு சுமார் எண்ணுயிரம் குடும்பங்களுக்கு வேலை வாய்ப்பளிக்கப்பட்டுள்ளது.

அநுராதபுர மாவட்டத்தில் கடந்த சூறவளியால் பாதிக்கப்பட்டு கஷ்டமடைந்து அவர்களின் அன்றாட சீவியத்துக்குக்கூட கஷ்டப்பட்ட மக்களுக்கு அநுராதபுர அரசாங்க அதிபரும், சமூகசேவைப்பகுதி உத்தியோகத்தர்களும் 350 க்கு மேற்பட்ட நிவாரண வேலை முகாம்கள் அமைத்து அதன் மூலம் அந்த மக்களுக்கு வேலை வசதி கொடுத்து அவர்களின் கஷ்டத்தைத் தீர்ப்பதற்கு முன் வந்துள்ளார்கள். இது வரை காலமும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண வேலைக்கு ஊதியமாக ஒரு லட்சம் ரூபாவுக்குமேல் கொடுக்கப்பட்டதாகவும் இதைவிட கூடுதலான நிவாரண வேலை முகாம்கள் அமைத்து மக்களுக்கு மீண்டும் உதவி அளிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படவிருப்பதாகவும் அறிவிக்கப்படுகிறது.

சூறவளியால் பாதிக்கப்பட்ட இடங்களில் கூடுதலான நிவாரண முகாம்கள் அமைத்தது அநுராதபுரம்தான் என்று தெரிகிறது. இதில் சுமார் 8000 குடும்பங்களுக்கு மேல் வேலை வாய்ப்பு பெற்றுள்ளதாகவும் அறிவிக்கப்படுகிறது. பாதிக்கப்பட்ட மக்களின் பகுதிகள் திருத்தி அமைத்தல், வீடுகட்டல், வீதிகள் அமைத்தல், குளம் கட்டல், வாய்க்கால் திருத்துதல் ஆகியவேலைகளில் இவர்கள் ஈடுபட்டுள்ளார்கள்.

## மகாநாட்டிற்கு ஏற்பாடுகள்

துணுக்காய், ஞாயிறு

ஜூலை மாதம் மல்லாவியில் நடைபெறவிருக்கும் திருக்குறள் மகாநாட்டைச் சிறப்புற நடத்துவதற்காக இப்பகுதியில் உள்ள பெரியோர்கள் ஒன்று சேர்ந்து ஓர் நிர்வாக சபையைத் தெரிவு செய்துள்ளனர் இதன் போஷகர்களாக திரு க. பொ. இரத்தினம், திரு எஸ். திரிவிங்கநாதன், திரு ச. ஜெயகாந்தன், திரு வி. பாலசுப்பிரமணியம் ஆகியோரும் தலைவராக திரு க. சோமசுந்தரமும், இணைச்செயலாளர்களாக திரு மு. ஆறுமுகன், திரு ச. ஜெயபாலன் ஆகியோரும் தனதிகாரியாக திரு வி. வேலுப்பிள்ளையும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

### அமெரிக்கத் தூதுவரின் யாழ்ப்பாண விஜயம்

சுழிபுரம், ஞாயிறு

யாழ்ப்பாணக் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வதற்காக இம்மாதம் 26-ந் திகதி புதன்கிழமை அமெரிக்கத் தூதுவர் திரு. ஸிஸில் பி. லெயோன் யாழ்ப்பாணம் வருகிருர்.

## இன, மத ஒற்றுமை கூட்டம்

### காலியில் நடைபெற்றது

பம்பலப்பிட்டி, ஞாயிறு

சமூக இன, மத ஒற்றுமையை உண்டாக்கும் மூன்ருவது கூட்டம் காலியில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

இத்தொடரில் முதலாவது இரண்டாவது கூட்டங்கள் கொழும்பிலும் யாழ்ப்பாணத்திலும் நடைபெற்றன. இந்த மூன்று கூட்டங்களும் இளைப்பாறிய பொது தர்மகர்த்தா திரு வி. எப். குணரத்தினுவால் ஒழுங்கு செய்யப்பட்டதென்பது குறிப்பிடத்தக்கது.

கெய்ரோ, மே 23

கெய்ரோவுக்கருகில் பாகிஸ்தான் விமானமொன்று விபத்துக்குள்ளாகியதால் இறந்த 102 பேர்களின் சடலங்கள் கெய்ரோவில் அடக்கம் செய்யப்பட்டனர். 19 சடலங்கள்

# நேரு சிரார்த்ததினம் மே 27-ம் திகதி

புதுடில்லி, மே. 23

வருகிற 27-ம் திகதி வரும் நேருவின் முதலாவது சிரார்த்த தினத்தை துக்கதினமாகக் கொண்டாட வேண்டாம் என்றும், நேருவின் கொள்கைகளை நினைவுபடுத்தி அவற்றை நிறைவேற்றும் பிரதிக்ஞை தினமாக அனுஷ்டிக்கும்படியும் நேரு நினைவுதினக் கமிட்டி மக்களைக் கேட்டுக் கொண்டிருக்கிறது.

மே 27-ம் திகதி விடுமுறை தினம் அல்ல. ஆனுல் விரும்பியவர்கள் அன்றைய ஒருநாள் சம்பளத்தை நேரு நினைவு நிதிக்கு கொடுக்கலாம் என்றும் அது ஆலோசனை கூறியிருக்கிறது.

நேரு வசித்த தீன்மூர்த்தி இல்லம் அன்றையதினம் பொதுமக்களுக்குத் திறந்து விடப்படும்.

அவரது சமாதியான சாந்தி வனத்தில் பல நிகழ்ச்சிகள் நடைபெறும்.

மே 27-ம் திகதி மாலை ராம்லீலா மைதானத்தில் "ஜவஹர் ஜோதி"யை பிரதமர் லால் பகதூர் சாஸ்திரி வரவேற்பார்.

## தமிழரசு வாலிபர் சுறுசுறுப்பு

வல்வெட்டித்துறை, ஞாயிறு

வல்வெட்டித்துறை சிதம்பராக்கல்லூரியில் புதிதாக மேல்மாடி கட்டிட வேலைகள் ஊரவர் ஒருவரின் நன்கொடையால் தற்பொழுது நடைபெற்றுக்கொண்டிருக்கிறது இப்புனருத்தாரண வேலைகளில் வல்வை தமிழரசு வாலிபமுன்னணியினர் கலந்து வேலை செய்து வருகின்றனர்

மேற்படி முன்னணியினர் இம்மாதம் பொலிகண்டி மீனவர் குடியேற்றத்தில் நடைபெற்ற சிரமதான இயக்கத்திலும் கலந்துகொண்டனர்

சுழிபுரம், ஞாயிறு

பனிப்புலம் அம்மன் கோவில் வருடாந்த உற்சவம் நேற்று முன் தினம் கொடியேற்ற வைபவத்துடன் ஆரம்பமாகியது. தொடர்ந்து பத்துத் தினங்கள் திருவிழா நடைபெற்று 29-5-65 சனிக்கிழமை தேர்த்திருவிழா நடைபெறும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

முயற்சி எவ்வளவோ,
பயனும் அவ்வளவே.
காலம் என்பது,
யோகம் என்பது ஒன்றில்லை,

— ஜேம்ஸ் ஆலன்


# ஈழநாடு

EELA NADU National Tamil Daily. Post Box 49, Jaffna. Telegrams: "EELA NADU" Jaffna Phone: 389.

விசுவாவசு ஆண்டு வைகாசி மீ 11 உ. (24-5-65)


## வெள்ளம், வரட்சிக்கு நிரந்தரத் தீர்வு

சமீபத்தில் கொழும்பிலும் மற்றும் தென்னிலங்கையின் சிலபகுதிகளிலும் வெள்ளம் காரணமாக ஏற்பட்ட சீர்குலைவுகள் இன்னும் சீர்செய்யப்படவில்லை. இது வருடாவருடம் நிகழும் சம்பவங்கள் தான். என்ருலும் இதற்கு நிரந்தரமான தீர்வு காண முடியாதா.

கொழும்பிலும் தென்னிலங்கையின் இதரபகுதிகளிலும் மலைநாட்டுப்பகுதிகளிலும் சமீபத்தில் வெள்ளம் ஏற்பட்டது இதனுல் பெருந்தொகையான மக்கள் வீடுவாசல்களை இழந்து அல்லலுற்றனர். வெள்ளம் இப்பொழுது வடிந்துவிட்டது மக்களும் தங்கள் தங்கள் இடங்களுக்குத் திரும்பிவாழ்க்கையைப் புதிதாகத் தொடங்க ஆரம்பித்துள்ளனர். மகாவலி கங்கை, களனிகங்கை முதலிய ஆறுகளிலும் வெள்ளப்பெருக்கு தணிந்துவிட்டது. வெள்ளத்தினுல் ஏற்பட்ட போக்குவரத்துச் சீர்குலைவு சிறிது சிறிதாகச் சீர்திருந்தி வருகிறது. வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்கள் பலர் இன்னும் அரசாங்கத்தின் நிவாரண உதவியிலேயே தங்கியிருக்க வேண்டியுள்ளனர்.

இதேபோல் நாட்டின் மற்றும் சிலபகுதிகளில் வரட்சியின் கொடுமையும் மக்களைப் பாதித்துள்ளது. வெள்ளத்தினுலும் வரட்சியினுலும் மக்களின் வாழ்க்கை நாதிக்கப்படுவதுடன் பயிர்களும் அழிந்து விடுகின்றன; வெள்ளத்தினுல் பயிர்கள் அழிவதுடன் வரட்சியினுல் பயிர்கள் காய்ந்து நாசமாகிவிடுகின்றன. இதனுல் உணவுப் பொருள்களை குறிப்பாக அத்தியாவசிய உணவுப் பொருள்களை இறக்குமதி செய்ய வேண்டியது அவசியமாகிறது. இதற்குப் பெருந்தொகையான பணம் இங்கிருந்து வெளிநாடுகளுக்கு அனுப்ப வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகிறது. உணவுப் பொருள்களுக்காக வெளிநாடுகளுக்குப் பணம் அனுப்ப வேண்டியதுடன் உள்நாட்டில் வெள்ளத்தினுலும் வரட்சியினுலும் பாதிக்கப்படும் மக்களுக்கு நிவாரண உதவியாகவும் அவர்களுக்குப் புனர்வாழ்வளிப்பதற்காகவும்பெருந்தொகையான பணம் செலவிட வேண்டிய நிர்ப்பந்தமும் ஏற்படுகிறது.

சில மாதங்களுக்குமுன் இலங்கையின் வடக்கு கிழக்குப் பகுதிகளில் கோரப்புயல் வீசியதும் அதனுல் மக்கள் பெருமளவு பாதிக்கப்பட்டதும் அவர்களுக்கு இன்னும் நிவாரண உதவி வழங்கப்பட வேண்டியிருப்பதும் உண்மையே. ஆனுல் இங்கு சூருவளி பல வருடங்களுக்கு ஒருதடவைதான் வீசியிருக்கிறதேயொழிய தென்னிலங்கையில் போன்று அடிக்கடி வெள்ளம் ஏற்படுவதில்லை. சரியான முறையில் அதுவும் அடிக்கடி வெள்ளம் ஏற்பட்டு அந்த அனுபவத்தின் மூலம் அதைத் தடுத்து மழைநீரையும் ஆற்றுநீரையும் விவசாயத்துக்குப் பயன்படுத்தி வெற்றிகண்ட உலகநாடுகள் பலவற்றின் உதவியையும் ஒத்துழைப்பையும் பெற்று இங்கும் வருடாவருடம் ஏற்படும் இயற்கைத் தீமையை வெற்றிகொள்ள முடியும். வெள்ளத்தினுலும் வரட்சியினுலும் பாதிக்கப்படும் மக்களுக்கு வருடாவருடம் வழங்கப்படும் நிவாரண உதவிக்குச் செலவிடும் பணத்தைக் கொண்டே இதற்கான திட்டங்களைத் தயாரித்து இப்பிரச்சினைக்கு நிரந்தரத்தீர்வு காணமுடியும்.

வெள்ளப் பெருக்கிற்கும் வரட்சிக்கும் நிரந்தரத் தீர்வு காணும் நோக்கத்துடன் தான் களனிகங்கைத் திட்டமும் மகாவலிகங்கைப் பலநோக்கத்திட்டமும் பரிசீலனை செய்யப்பட்டன. இவற்றை ஆராய்ந்த வெளிநாட்டு நிபுணர் கோஷ்டினும் தங்கள் அறிக்கையைச் சமர்ப்பித்திருந்தன. அவற்றுள் ஒன்று மகாவலி கங்கையை வரட்சிப் பிரதேசமான வடபகுதிக்குத் திருப்பிவிடுவதாகும். இத்திட்டத்தை அரசியல் மற்றும் காரணங்களால் அமுல் நடத்த முன்னைய அரசாங்கம் பின்னின்றிருக்கக்கூடும். இப்பொழுது நிறைசேரிகாலியாக இருப்பினும் வெளிநாட்டு உதவிகளைக்கொண்டே இத்திட்டங்களை அமுல் நடத்த நடவடிக்கையெடுப்பதன் மூலம் வெள்ளத்தாலும் வரட்சியினுலும் ஏற்படும் கஷ்டங்கள் நீங்கி நாடு விவசாயத்திலும் பொருளாதாரத்திலும் முன்னேற வழி கிடைக்கும்.

## பி. எஸ். ராமையா மணிவிழா

சென்னை, மே 22

திரு பி. எஸ். ராமையாவின் மணிவிழா இம்மாதம் 29ந் தேதியன்று சென்னை மயிலாப்பூரில் உள்ள ராஜேஸ்வரி கல்யாண மண்டபத்தில் நடைபெற ஏற்பாடாகியிருக்கின்றது. சிறுகதை, நாடகம் பற்றிய கருத்தரங்குகளும் மாலையில் பாராட்டுக்கூட்டமும் நடைபெறவிருக்கிறது. இலக்கிய கலை அரசியல் பிரமுகர்கள் திரு ராமையாவின் பலதுறை சாதனைகளைப் பற்றிப் பேசுவார்கள்.

அப்போது அவருக்கு ஒரு பணமுடிப்பு வழங்க நிதிதிரட்டப்பட்டுவருகிறது. சுதந்திர இயக்கத்தில் பங்குகொண்ட சிறந்த தேசபக்தரும் தலைசிறந்த சிறுகதை நாவலாசிரியரும் சினிமா நாடகம் வானொலி ஆகிய கலைத்துறைகளில் ஈடுபட்டுச் சென்ற 30 ஆண்டுகளுக்கு மேல் தமிழ்ப் பணி புரிந்துவருபவருமான ஒரு முதிர்ந்த எழுத்தாளர் பி. எஸ். ராமையா.

மணிவிழாவுக்கான ஏற்பாடுகளை விழாக் குழுத் தலைவர் திரு. ஏ. வி. மெய்யப்பன் செய்துவருகிருர்.

ஆசிரியருக்குக் கடிதங்கள்

# பொறுமையும் நிதானமும் வேண்டும்

இங்கு தமிழ்பேசும் மக்கள் சென்ற 8 வருடங்களாக அடைந்த அல்லல்கள் அனந்தம். எல்லாம் வல்ல இறைவன் தற்பொழுது நல்ல சூழ்நிலையை ஏற்படுத்தியுள்ளான. அரிதாகவும், கஷ்டத்துடனும் கிடைத்த இந்த அரிய சூழ்நிலையை நாம் பழாக்கிவிடக்கூடாது. தேசிய அரசாங்கம் உருவாகியது எம்முடைய பிரார்த்தனையின் பயனுல் அன்ருே? பொதுமக்கள் பொறுமையாகவும் நிதானமாகவும் நடந்துகொள்கிருர்கள். ஆனல் தமிழ்த்தலைவர்களில் சிலர் ஒருவரையொருவர் தாக்கிவருகின்றனர். இத்தகைய வேறுபாட்டினைக் கட்ட தேசபக்தியுள்ள, மொழிப்பற்றுள்ளவர்கள் தயங்குவர், வருந்துவர். சென்ற எட்டு வருடங்களாக நாட்டில் நிலவிய சூழ்நிலையை நாம் எல்லோரும் ஞாபகத்தில் வைத்திருக்கவேண்டும். தமிழர்களுக்கு ய நன்மை தனிப்பட்ட ஒருவரின் சொந்தமான விஷயமல்ல. பொருமை, துவேஷம், சுயநலம் முதலிய தீய எண்ணங்களைத் தவிர்த்து தூய உள்ளத்துடன் நாட்டின் பொதுநன்மையே குறிக்கோளாக நினைத்து நாம் ஏகோபித்து ஒருமைப்பாட்டுடன் பணியாற்றவேண்டும். எதற்கும் அறிக்கைவிடுவதும் எதற்கும் மறுப்புத் தெரிவிப்பதும் வகைமையையே வளர்க்கும்.

நாம் பொறுமையாக இருக்க வேண்டும். பொறுமை மலைபோல் வரும் தீமைகளையும் வெல்லும். ஆகையால் தமிழர்களுக்கிடையில் வேற்றுமையைக் காட்டாமல் ஒருவருக்கொருவர் உதவியாயிருந்து தொண்டாற்றவேண்டும். தேசிய அரசாங்கத்துடன் ஒத்துழைத்து எமது இழந்த உரிமைகளையும்பெற வகை செய்யவேண்டும் நாட்டின் சுபீட்சமும் பொருளாதார விருத்தியும் வளர நாம் இடைவிடாது முயற்சிசெய்யவேண்டும். இப்போது நாட்டில் வேண்டுவது சட்டமும், ஒழுங்கும், சமாதானமுமே. இதற்கு முரணுக நடப்பவர்கள் தமக்கும் பொதுமக்களுக்கும் தீமை செய்பவர்களாவர்.

மூ. க.

ஏழாலை மேற்கு.

## வெங்காயச் செய்கை

20-5-65ந் தேதி ஈழநாட்டில் வெங்காயச் செய்கை பற்றி திரு. புலேந்திரன் எழுதியிருந்தார். நுணுக்காய், வவுனியாவின் செலவினங்கள் வித்தியாசப்படக்கூடுமென்பது உண்மையே, ஆனுல் வெங்காயம் அதிகமாக விளைவிக்கப்படும் இடங்கள் வலிகாமம் வடக்கு, வலிகாமம் கிழக்கு என்பது எல்லோருக்கும் தெரியும்.

மாட்டெரு அரை லொறி போதாது. அப்படியாயின் கால்நடைகளை அந்தத் தறையில் ஒருமாதகாலத்திற்காவது கட்டியிருக்கவேண்டும். இல்லையென்ருல் நன்கு பசளையிட்டு வெங்காயச் செய்கைக்கு முன் புகையிலை போன்ற வேறு பயிர் விளைவித்திருக்கவேண்டும்.

இரண்டு வண்டில் குழையும் தாழ்ப்பதற்குப் பத்துக் கூலியாவது வேண்டும், விதை வெங்காயம் 5 அந்தர் போதாதென்பது எனது அபிப்பிராயம். ஆறரை, ஏழு அந்தர் நாட்டுவாரும் உளர்.

வெங்காய அறுவடைகாலத்தில் வேலையாட்கள் கிடைக்காமல் ஒரு பெண் கூலிக்கு மூன்றுருபா வீதமும் கொடுக்க வேண்டியிருக்கும்.

ஆகக்கூடிய மிக நல்ல விளைவு எட்டு மடங்குகள் [illegible] வெங்காயச் செய்கையாளர்கள் பெறமாட்டார்கள். 25 விதச் செய்கையாளர் 6 மடங்கு விளைவையே பெறுகின்றனர். 25 வீதத்தினர் 5 மடங்கையும், மிகுதியினர் 4 மடங்கையுமே அறுவடைசெய்கின்றனர். இது மிகவும் துக்ககரமான முடிவுதான். ஆனுல் உண்மையை பயமின்றி ஏற்றுக்கொள்ளவேண்டும் கிராமங்களில் 60 வீதத்தினர் கமச்செய்கையால் கடனாளிகளாவதை ஒப்புக்கொண்டுதானுக வேண்டும். இன்னும் குத்தகை முதலிய செலவினங்களும் உண்டு. ஆகவே நான் கணக்கிட்டதிலும் பார்க்கக்கூடிய நஷ்டம் வெங்காயச் செய்கையால் அநேகருக்கு உண்டென்பதை மறைக்கமுடியாது

கூலி கொடுக்காமல தன் கையால் தன் குடும்பத்தின் உதவியால் இவ்வளவு வேலைகளையும் குறுகிய காலத்தில் செய்துமுடிக்கலாமா? அதுவும் முடியாது. வெங்காய விலையைக் கூட்டவேண்டும் அல்லது ஆனை இறவுத் தடையை நீக்கவேண்டும், இப்பிரச்சினைக்கு வேறு மார்க்கம் இல்லை.

செ. செந்தில்நாதன்

புன்னலைக்கட்டுவன்.

## பயன்தரும் மரங்களை பாதுகாக்க முடிவு
### பட்டினசபை தீர்மானம்

ஊர்காவற்றுறை, ஞாயிறு

ஊர்காவற்றுறைப் பட்டின சபையின் மாதாந்தக்கூட்டம் நேற்று பட்டினசபைத் தலைவர் திரு. வே. சிவசம்பு தலைமையில் நடைபெற்றபோது "நம்நாட்டில் பனை, புளி போன்ற பயன்தரும் மரங்கள் பாதுகாக்கப்பட வேண்டும்" என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

ஐந்தாம் வட்டார அங்கத்தவர் திரு. எஸ். எம். அப்பிரட் தென்னிலங்கையில் சில காலத்துக்குமுன் பலாமரங்களைக் காப்பதற்கு ஒரு "இயக்கம் தொடங்கப்பட்டது போல் நமது நாட்டிலும் ஒரு இயக்கம் உண்டாக்கப்பட்டு "வனமகோற்சவம்" கொண்டாடப்பட வேண்டுமெனவும் இயக்கத்தை வளர்ச்சிபெறச் செய்ய பரிசுத்திட்டம்" ஒன்றையும் ஏற்படுத்த வேண்டுமெனவும் கூறினர்.

ஊர்காவற்றுறை, கரம்பன், வட்டாரங்கள் மிகவும் விஸ்தீரணமாகவும் பெருந்தொகையான மக்கள் வசிக்கும் இடங்களாகவும் இருந்தும், இப்பிரிவுகளில் பிறப்பு, இறப்பு, கலியாணப்பதிவு காரியஸ்தர் இல்லாமல் இருக்கிறது. பட்டினப்பகுதி மக்கள் நாரந்தனைக் கிராமத்திற்குச் சென்றேபதிவு செய்து வருகிருர்கள். ஆதலால் ஊர்காவற்றுறை பட்டினப்பகுதிக்கு ஒரு பதிவுக்காரியஸ்தரை நியமிக்க வேண்டும் என்று அரசினரைக் கேட்டுக்கொள்ளும் தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது.

ஊர்காவற்றுறை, சுருவில் 8-ம் கட்டையில் கட்டப்பட்ட அணைகடல்நீர் பழுதடைந்தமையால் சுற்றுவட்டாரங்களில் உள்ள நீர் உப்புநீராகிவிடுகிறது. இந்த அணைக்கட்டு உடனடியாகத் திருத்தம் செய்யப்பட வேண்டுமென தீவுப்பகுதி எம். பி.யையும் காணி நீர்ப்பாசன அமைச்சரையும் கேட்டுக்கொள்ளும் தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது.

ஊர்காவற்றுறை சனசமூக நிலையத்தைப் பட்டினசபை நூல்நிலையமாக்கும்படி உதவி உள்ளூராட்சி அதிபர் எழுதிய கடிதமபற்றி இக்கூட்டத்தில் ஆராயப்பட்டு பட்டின சபை நூல்நிலயமாக்கு [illegible] தீர்மானிக்கப்பட்டது.

## இனப் பிரச்னை பற்றி கருத்துப் பரிமாறல்

யாழ்ப்பாணம், திங்கள்

இனப் பிரச்னை சம்பந்தமான இறுதி ஆய்வு வைத்தீஸ்வர வித்தியாலயத்தில் ஜூன் மாதம் 2ந் தேதி மாலை 5 மணியளவில் நடைபெறும். அப்பொழுது திரு. கே. கேசையா 'இனப் பிரச்னையும் அதைத் தடைசெய்யும் முறைகளும்' பற்றித் தனது கருத்தைத் தெரிவிப்பார்.

இதைத் தொடர்ந்து இப்பிரச்னை பற்றிக் கருத்துப் பரிமாறலும் இப்பிரச்னையைச் சமாளிப்பதற்கான நடவடிக்கைகள் பற்றியும் ஆராயப்படும். சன்மார்க்க ஆச்சிரம சமூக-சமய படிப்புச் சங்கத்தினர் இதனை நடத்துவார்கள்

## சம்பந்தர் குருபூசை

வல்வெட்டித்துறை, ஞாயிறு

செல்வச்சந்நிதி ஆனந்தாச்சிரமத்தில் திருஞானசம்பந்தர் குருபூசை வெகு விமரிசையாகக் கொண்டாடப்பட்டது, திரு. மயில்வாகனம் பேசும்பொழுது தெரிவித்ததாவது:

நமது சைவசமயம் கீழ்நிலையடைந்திருந்த நேரத்தில் இறைவனின் அவதார புருஷர்களாக சமயக்குரவர்கள் தோன்றினுர்கள், அவர்களுள் திருஞானசம்பந்தர் இளம் வயதிலிருந்தே சமயத்தையும் தமிழையும் வளம்பெறச் செய்துவந்தார். அவர் இறைவனை உலகநன்மையின் பொருட்டே வணங்கி வந்தார்

### நீர்வேலியில்

நீர்வேலி ஸ்ரீ விநாயக சனசமூகநிலயத்தல் இந்துசமய விருத்திச்சங்கத்தினரால் சம்பந்தர் குருபூசை சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. அப்பொழுது பூஜை, கூட்டுப் பிராரத்தனை முதலியன நடைபெற்றன

## இப்படியும் இருக்கிறுர்கள்!

பருத்தித்துறை, ஞாயிறு

கரவெட்டி கிழக்கு கவுந்தல் பெரியதோட்டம் கிராமமுன்னேற்றச்சங்கம் இ. போ. ச. பருத்தித்துறை டிப்போவைச் சேர்ந்த பஸ் கண்டக்டர் ஒருவரது சேவையையிட்டுப் பாராட்டி பிராந்தியமுகாமையாளர், டிப்போ மனேஜர் ஆகியோருக்கு வடமராட்சிக் காரியாதிகாரிகூடாக மகஜர் ஒன்றை அனுப்பிவைத்துள்ளது.

18-5-65ம் திகதியன்று ஆவரங்காலில் இருந்து நெல்லியடிக்குச்செல்ல பஸ்ஸில் ஏறிய வயோதிபத் தம்பதிகளில் மனைவி மயக்கமுற்று சரிந்ததாயும் உடனே கொண்டக்டர் அவரைத் தாங்கிப் பின் ஆசனத்தில் படுக்கவைத்து காற்றுவீசி அச்சுவேலி வந்ததும் தமது செலவிலேயே கோப்பி வாங்கிக்கொடுத்து ஓரளவு பிரக்ஞை வந்ததும் நெல்லியடியில் இறங்க முற்பட்ட அவர்கட்கு கரவெட்டி செல்ல கார் பிடித்து வழியனுப்பியும் வைத்தாராம்.

பஸ்ஸில் மனைவி மயக்கமுற்றதும் கணவன் நடுநடுங்கிபெரிய அவஸ்தைப்பட்டபோது அவருக்கும் ஆறுதல் கூறியகொண்டக்டரைப் பாராட்டியதுடன் இதுபோன்ற சேவையால் இ போ ச வின் சேவை மக்கள் இடத்தில் மேலும் நல்லெண்ணத்தைப் பெறும் என நம்புவதாயும் அக்கடிதத்தில் காட்டியுள்ளது.

## வாலிப முன்னணி மகாநாடு

கல்முனை, ஞாயிறு

இலங்கைத் தமிழரசு வாலிப முன்னணியின் வருடாந்த மகாநாட்டை விரைவில் மட்டக்களப்பில் நடத்துவது பற்றி வாலிபமுன்னணிக் கூட்டத்தில் ஆலோசிக்கப்பட்டது.

கிழக்கு மாகாணத்தில் ஒப்பு மனவில் இம் மகாநாட்டை நடத்துவதற்கு உறுப்பினர்கள் விருப்பம் தெரிவித்திருப்பதாகக் கூறப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெலோனியோ நகரம் காலிசெய்யப்பட்டது

புதுடில்லி, மே. 23

திரிபுரா எல்லையில் பாகிஸ்தானியர்களின் இடைவிடா துப்பாக்கிப்பிரயோகம் காரணமாக வெலோனியா நகரத்திலிருந்து மக்கள் அப்புறப்படுத்தப்பட்டிருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

காஷ்மீரில் ஆயுதம் தரித்த பாகிஸ்தானியர் எல்லைக் கோட்டைத் தாண்ட முயன்றபோது, துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டதால் 4 பேர் பலியாகினர் என்றும், 10 பேர் காயமடைந்தனர் என்றும் அறிவிக்கப்படுகிறது.

கடந்த 3 தினங்களாக எல்லைக் கோட்டைத் தாண்டும் முயற்சியில் அவர்கள் தீவிரமாக ஈடுபட்டு வருவதாயும், ராக்கெட்டுகள், இயந்திரத் துப்பாக்கிகள், மோர்ட்டர் பீரங்கிகள் ஆகியவற்றினால் அவர்கள் நேற்று தாக்குதல் நடத்தினர்கள் என்றும் அறிவிக்கப்பட்டது.

ஐ. நா. பார்வையாளர்களிடம் இது பற்றிப் புகார் செய்யப்பட்டதென்றும், நிலைமையைப் பார்வையிடச் சென்ற ஐ. நா. அதிகாரிமீதும் பாகிஸ்தானியர் சுட்டனர் என்றும் கூறப்பட்டது.

# 18 டார்பிடோ படகுகள் மூழ்கடிக்கப்பட்டன

## வடவியட்னும் மீது தாக்குதல்

சைகோன், மே. 23

நேற்று 90 க்கு மேலான அமெரிக்கவிமானங்கள் வடவியட்னும் தலைநகர் ஹானுேய்க்கு 60 மைல் தூரத்தில் ராணுவ முகாம்கள், பாலங்கள், கட்டிடங்கள் ஆகியவற்றைப் பலமாகத் தாக்கிச் சேதப்படுத்தியதாய் அறிவிக்கப்படுகிறது.

மேலும் 20 டார்ப்பிடோ படகுகள் மீது அவை குண்டுமாரி பொழிந்ததால் 18 படகுகள் மூழ்கிவிட்டன என்று அறிவிக்கப்படுகிறது.

அதேசமயம் தென்வியட்னுமில் வியட்காங்கியர் நடத்திய ஒரு தாக்குதல் காரணமாக ஒரு அமெரிக்க ஆலோசகரும், 59 வியட்னும் துருப்புக்களும் மாண்டதாக அறிவிக்கப்படுகிறது.

# ஸ்டேலி பாக். உளவுகாரர் என்கிருர் முன்னுள் மந்திரி

கல்கத்தா, மே. 23

பிரிட்டிஷ் பத்திரிகையாளர் ஸ்டேலி, அநேகமாக உளவுக்காரராக இருக்கலாம் என முன்னுள் மந்திரி திரு. கே. டி. மாளவியா நிருபர்களிடம் கூறினர்.

''பாகிஸ்தானிடமிருந்து ஏதோ தகவலை திரு. ஸ்டேலி அப்துல்லாவுக்குத் தெரிவித்திருக்கவேண்டும், அப்துல்லாவைப் போலவே ஸ்டேலியையும் சிறைப்படுத்தியிருக்கவேண்டும்" என்றும் அவர் கூறினர்.

"இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்குமிடையே காஷ்மீர் பற்றி அடிப்படையில் கருத்து ஒற்றுமை இல்லை, இருநாட்டு உறவில் நெருக்கடியான கட்டம் ஏற்பட்டிருக்கிறது" என்றும் மாளவியா குறிப்பிட்டார்.

ஷேக் அப்துல்லாவை இந்திய அரசாங்கம் காவலில் வைத்தது காஷ்மீர்பிரச்னையை மேலும் மோசமாக்கும் தன்மையுடையது என்றும், ஐ. நா. தீர்மானத்துக்கு முரணானது என்றும் பாகிஸ்தான் பாதுகாப்பு சபைக்கு புகார் செய்துள்ளது.



அமெரிக்க வானவெளிவீரர் கிளிப்பன் வில்லியம்ஸ், இதர வானவெளி வீரர்களும் ஹாவாயிலுள்ள வொல்காஞே தேசிய பூங்காவில் ஒரு பயிற்சியிலீடுபட்டிருப்பதை படத்தில் காண்க.

# மலையேறிகள் நிலை தெரியவில்லை

புதுடில்லி, மே 23

எவரெஸ்ட் சிகரத்தின் மீது ஏற முயன்ற 2-வது இந்திய மலையேறும் கோஷ்டியுடன் வயர்லெஸ் தொடர்பு அற்றுப்போய் விட்டதாகக் கூறப்பட்டது. நேற்றுப்பகல் 1-20 மணிக்கு உச்சியை அடைந்தபின் அவர்கள் திரும்பினர் என்றும், அதன்பின் சிகரத்திலிருந்து 50 அடிக்குக் கீழே காணப்பட்டனரென்றும் கூறப்பட்டது.

---

# இந்தியா-குவாய்த் கூட்டுக் கமிட்டி

குவாய்த், மே 23

பொருளாதாரம், தொழில் நுட்பம் ஆகியவற்றில் கூட்டாக ஒத்துழைக்கும் முறையில் இந்தியாவும், குவாய்த்தும் கூட்டுக் கமிட்டிகளை அமைக்க இணங்கியிருக்கின்றன. இந்திய உப-ஜனதிபதி டாக்டர் ஸாகிர் ஹுசைனின் குவாய்த்துக்கு விஜயம் செய்ததை அடுத்து இந்த ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன, இன்று அவர் ஸவூதி அரேபியா செல்கிஞர்.

---

டொமினிக்கன்

# 'சண்டையை நிரந்தரமாக நிறுத்துக'

நியூயோர்ச், மே 23

டொமினிக்கன் குடியரசில் தற்போது ஏற்பட்டுள்ள தற்காலிக சண்டைநிறுத்தத்தை நிரந்தர சண்டைநிறுத்தமாக நீடிக்கும் படி சம்பந்தப்பட்ட கட்சிகளைக் கேட்டுக்கொள்ளும் பிரெஞ்சு தீர்மானம் ஐ. நா. பாதுகாப்பு சபையில் நிறைவேறியது. 10 நாடுகள் இதற்கு ஆதரவாக வாக்களித்தன, அமெரிக்காவாக்களிக்கவில்லை,

---

# ஹைட்ரஜனுக்கு 10 ஆண்டுகாலம்

வாஷிங்டன், மே 23

இன்னும் 10 ஆண்டுகளில் சீன ஹைட்ரஜன் குண்டை உற்பத்தி செய்யும் நிலையில் இருக்கும் என அமெரிக்க நிபுணர்கள் கூறினர்.

இந்தியா, சுவீடன், ஜப்பான், இத்தாலி ஆகிய நாடுகளும் ஹைட்ரஜன் குண்டு உற்பத்தி செய்யும் சக்தியுடன் இருந்தபோதிலும், அவை அப்படிச் செய்யுமென்று தோன்றவில்லை எனவும் அவர்கள் கூறினர்.

---

# 'எங்கள் யோசனை தான் பெரிது'

புதுடில்லி, மே 23

வியட்னுமில் ஆசிய ஆபிரிக்க படை ஒன்றை வைப்பதுபற்றி ஜனதிபதி ராதாகிருஷ்ணன் தெரிவித்த யோசனையை வடவியட்னும் தூதர் நிருபர்களின் கேள்விக்குப் பதிலளிக்கையில் கூறினர். தமது நாடு தெரிவித்துள்ள 4 அம்சயோசனையைத் தவிர வேறு எந்த இடத்து யோசனையையும் ஏற்காது என அவர் கூறினர்.

---

# 6 பேர் சூட்டுப் பலி

கராச்சி, மே 23

ஸ்ரீ நகரில் கடந்த 12-ம் திகதி நடைபெற்ற ஷேக் அப்துல்லா ஆதரவாளர்களின் ஆர்ப்பாட்டத்தில் பொலிசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் 6 பேர் கொல்லப்பட்டதாயும், பலர் காயமடைந்ததாயும் அறிவிக்கப்படுகிறது.

---

# சித்திரம் கிடைத்தது

லண்டன், மே 23

4 ஆண்டுகளுக்குமுன் லண்டன் கலைக் கூடத்திலிருந்து காணாமற்போன "வெலிங்டன் [illegible] மிக்க சித்திரம் மீண்டும் கண்டுபிடிக்கப்பட்டது.

# "மீண்டும் போர் வந்தால் திட்டமான முடிவுகாண்போம்"

## அயூப்கான் மிரட்டல்

கராச்சி, மே. 23

எதிர்காலத்தில் இந்தியாவுடன் ஆயுதம் தாங்கிய போராட்டம் மூளுமானுல், அதில் திட்டவட்டமான முடிவு காணப்படும் என பாகிஸ்தான் அதிபர் அயூப்கான் கூறினர்.

"இந்தியா மீது போரைத் திணிக்க பாகிஸ்தான் விரும்பவில்லை, ஆனுல் இந்தியா ஆக்கிரமிக்குமானுல் நிலைமையைச் சமாளிக்கமுடியும் என்ற நம்பிக்கை எனக்குண்டு" என்ருர் அயூப்.

சேனுதிபதி மூஸாவுடன் படை முகாம்களுக்கு அயூப் விஜயம் செய்தார். துருப்புக்களிடம் பேசியபோதே இவ்வாறு அவர் கூறினர்.

'இந்தியா பாகிஸ்தானை அச்சுறுத்துகிறது. ஆகையால் தான் பாகிஸ்தான் பாதுகாப்புக்களை பலப்படுத்தவேண்டியிருக்கிறது" என்றும் அவர் கூறினர்.

அயூப்பின்பேச்சு ஆசிய-ஆபிரிக்க நாடுகளின் அனுதாபத்தைப் பெறுவதையே நோக்கமாகக் கொண்டது என விஷயமறிந்தவர்கள் கூறுகிறர்கள்.

# "இந்தியா - பாக். உறவை கெடுக்க முற்படவில்லை"

## —சீன குறிப்பு

ஹாங்காங், மே. 23

சமீபத்தில் சீன-பாகிஸ்தான் எல்லை ஒப்பந்த தஸ்தாவேஜுகள் கையெழுத்திடப்பட்டதை எதிர்த்து இந்தியா தெரிவித்த ஆட்சேபத்தை சீனநிராகரித்துவிட்டதாக பீகிங் ரேடியோ அறிவித்தது.

பீகிங்கிலுள்ள இந்தியத்தூதரகத்திடம் சீனவின் குறிப்பு கடந்த திங்கட்கிழமை கொடுக்கப்பட்டது.

சீனவின் சிக்கியாங் மாகாணத்திற்கும் தற்சமயம் பாகிஸ்தானின் பாதுகாப்பு பொறுப்பிலுள்ள எல்லைப்பகுதிகளுக்குமிடையே எல்லைக்கோட்டை வரையறுப்பதற்கானது. அந்த தஸ்தாவேஜு என குறிப்பு கூறியது. காஷ்மீர் பிரச்னை தீர்க்கப்பட்டதும் சம்பந்தப்பட்ட தரப்புடன் சீன அரசாங்கம் மீண்டும் பேச்சுநடத்தும் என்று தஸ்தாவேஜு விதிப்பதாகவும் குறிப்பு கூறியது.

இந்தியா-பாகிஸ்தான் உறவைக் கெடுக்க காஷ்மீர் பிரச்னையை சீன உபயோகிக்கவில்லை என்றும், இந்தியாவுக்கெதிரான ஆக்கிரமிப்பு நோக்கத்தை வளர்க்க இந்தியா-பாகிஸ்தான் வேறுபாடுகளை பயன்படுத்த விரும்பவில்லை என்றும் சீன மறுத்துள்ளது.

# கட்சில் முன்னேற்றம் இல்லை

புதுடில்லி, மே 23

கட்ச் பற்றிய பிரிட்டிஷ் யோசனை, தாம் ரஷ்யாவுக்குப் புறப்படுமுன் எந்த நிலையில் இருந்ததோ அதேபோல் தான் இப்போதும் இருக்கிறது என பிரதமர் சாஸ்திரி தெரிவித்தார்.

---

# வீதியை பட்டினசபை பொறுப்பேற்றது

சங்கானை, ஞாயிறு

சங்கானையிலுள்ள தனிப்பட்ட வீதியான 'முருகன் வீதியை' திரு. பொ. கனகரத்தினம் சங்கானை பட்டின சபையை பொறுப்பேற்று நடாத்தும்படி கடிதம் மூலம் தெரிவித்ததன் பேரில் இவ்வீதியை பட்டினசபை பொறுப்பேற்று நடாத்துவதெனறும், திரு. கனகரத்தினத்திற்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானமொன்றும் சபையின் மாதாந்தக் கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.



"எக்ஸ்எச் 51" என்ற இந்த ஹெலிகோப்டர் சாதாரணமாக மணிக்கு 201 மைல் பறக்கக் கூடியது. வேகத்தை அதிகரிப்பதுமூலம் மணிக்கு 242 மைல் பறக்கும். அமெரிக்க முப்படைகளின் உபயோகத்துக்கு வந்திருக்கும் இந்த வகை ஹெலிகோப்டர் விமானங்களில் ஒன்று கலிபோர்னியா பேர்பேங்கில் பயிற்சியிலீடுபட்டிருப்பதைக் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'சிரமதானப்பணி ஒரு தேசிய சேவை'

பருத்தித்துறை, ஞாயிறு

"சிரமதானம் எமது நாட்டிற்குப் புதியதல்ல. தமிழ் பேசும் மக்கள் மத்தியில் பழமைபெற்ற ஒரு தேசிய சேவையாக இது விளங்கிவந்துள்ளது. நாட்டிற்கு, நமது சமூகத்துக்கு நமது சரீர உழைப்பை நல்குவதற்குக் கிடைத்த ஒரு நல்ல சந்தர்ப்பமாக நாம் இதைக் கருத வேண்டும். இது தேசிய சேவை மட்டுமல்ல தலைசிறந்த இறைவன் சேவையென்று கூடக் கூறலாம். இச்சபை சுயநல நோக்கத்துடன் ஆரம்பமாகவில்லை. சகல தேவைகட்கும் நாம் அரசாங்கத்தை எதிர்பார்க்கும் நிலையைமாற்றி நமது சக்திகேற்ப நமது தேவைகளில் ஒருபகுதியையாவது நாம் செய்து முடித்துவிட இதுபோன்ற சிரமதானங்கள் எமக்கு வழிகாட்டடும்."

இவ்வாறு வடமராட்சிக் காரியாதிகாரி திரு. ஜே. டி. ஆர்னல்ட் பொலிகண்டியில் வடமராட்சிப் பகுதியின் நாலாவது சிரமதான இயக்கத்தை அங்குரார்ப்பணம் செய்து வைக்கும்போது கூறினர்.

"வடமராட்சியில் சிரமதான ஆர்வம் வளர்ந்து வருவதற்கு புலோலியில் சுமார் ஒருமாத காலமாக தொடர்ந்து நடைபெற்றுவரும் பாதைப் புனரமைப்பு வேலை ஒருசான்றாகும். படித்த, வேலையற்ற வாலிபர்களும் கிராமத் தொண்டர்களும் தொடர்ந்து செய்து வரும் அவ்வேலையையும்கிராம மக்கள் அளித்துவரும் ஒத்துழைப்பையும் பாராட்டாதிருக்க முடியாது" எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

### மீனவர்களுக்கு வீடு

மீனவர்களின் வீடில்லாப் பிரச்னையைப் போக்கும் நோக்கமாக அமைக்கப்பட்ட வீடுகட்கு போகும் பாதைகளை அமைத்து சுற்றுப்புறங்களைச் சுத்தப்படுத்துமுகமாக ஆரம்பமான இச்சிரமதானப் பணியில் பல்வேறு அரசியல்கட்சி வாலிப முன்னணியினர் உட்பட சுமார் 150-க்கு அதிகமான சிரமதானத் தொண்டர்கள் கலந்து கொண்டனர்.

இச்சிரமதானப் பணியை யாழ்மாவட்ட அதிபர் திரு. நெவில் ஜெயவீரா ஆரம்பித்து வைப்பதாக ஏற்பாடாகி இருந்தபோதிலும் அவர் தவிர்க்க முடியாத காரணங்களால் கொழும்பு சென்று விட்டதால் தாம் சமூகம் அளிக்க முடியாதமைக்கு வருத்தம தெரிவித்ததுடன் தமது ஆசியைத் தெரிவித்திருந்தார்.

---

## காணிக்கச்சேரி

பருத்தித்துறை, ஞாயிறு

வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த "சுதந்தரபுரம்" காணிக் கச்சேரிக்கு விண்ணப்பித்தவர்களுக்கான இறுதித் தெரிவுகள் நேற்றைய தினம் காரியாதிகாரி காரியாலயத்தில் நடைபெற்றது.

ஒரு ஏக்கர் நெற்காணியும், நாலு ஏக்கர் தென்னைச் செய்கைக்கான காணியுமாக மொத்தம் 5 ஏக்கர் விதம் கொடுபடவிருக்கும் இக்காணித் துண்டுகட்கு வடமராட்சிப்பகுதியில் இருந்து 18 பேர் தெரிவு செய்யப்பட்டனர். காணிப்பகுதி உத்தியோகத்தர் திரு. ஆர். கி. தர்மராசா விண்ணப்பங்களைப் பரிசீலனைசெய்து முடிவை அறிவித்தார்.

## ஞாபகார்த்த வைபவம்

முல்லைத்தீவு, ஞாயிறு

முல்லைத்தீவுப் பகுதியைச் சேர்ந்த தண்ணீரூற்றில் அப்பகுதியிலுள்ள சி. எம். எஸ். பாடசாலைகளில் தலைமை ஆசிரியராகவும், உள்ளூர் மூகாமையாளராகவும், கிறிஸ்தவசபையின் உபதேசியராகவும் சிறந்த கடமையாற்றிய காலஞ்சென்ற ஜேக்கப் நாகமணி முருகுப்பிள்ளையின் ஞாபகார்த்தவிழாவும் ஸ்தோத்திர ஆராதனையும் இம்மாதம் முதல் திகதியன்று நடைபெற்றது. பரி. மத்தியாஸ் தேவாலயத்தில் வண. கி. சி. ஏ. அருட்பிரகாசம், ஜனாப் சேவக் எஸ். செல்வரத்தினம் ஆகியோர் ஆராதனையை திருவிருந்துடன் நடத்தினர்கள். பின்னர் திரு. டி. எம். சபாரத்தினம் தலைமையில் திரு. வி. கே. நவரத்தினம், முதுதமிழ்ப்புலவர் திரு. எஸ். ஆழ்வாப்பிள்ளை ஆகியோர் காலஞ்சென்றவரின் நற்சேவைகள்பற்றி உரை நிகழ்த்தினர்.

# 'விவசாயக் கழகங்கள் மூலம் வேலையில்லாப்பிரச்னை தீரலாம்'

நல்லூர், ஞாயிறு

"இந்த நாட்டின் வேலையில்லாத் திண்டாட்டத்தை இளைஞர் விவசாயக் கழகங்கள் மூலம் ஓரளவு தீர்த்துவைக்கலாம். தேசிய உற்பத்தியைப் பெருக்க இளைஞர்களினால் தான் முடியும் என்று யாழ். மாவட்ட கிருஷிக இலாகா அதிபர் திரு. எஸ். கனகரத்தினம் இணுவிலில் நடைபெற்ற கூட்டமொன்றில் பேசுகையில் குறிப்பிட்டார்.

இணுவில் ஜோதி இளைஞர் விவசாயக்கழகத்தின் ஆதரவில் பம்பாய்வெங்காயச் செய்கை சம்பந்தமான பிரசாரக்கூட்டம் கழகத் தலைவர் திரு. பொ. கனகசபாபதி தலைமையில் நடைபெற்றது.

திரு. கனகரத்தினம் மேலும் குறிப்பிட்டதாவது:

பழைய முறைகளை மட்டும் கையாண்டு விவசாயத்தை அபிவிருத்தி செய்ய முடியாது. பழைய முறைகளுடன் நவீன முறைகளையும் கையாளவேண்டும். நவீன வசதிகளுடன் பம்பாய்வெங்காயம் போன்ற பயிர்களைச் செய்கை பண்ண வேண்டும். நாட்டை நலம் படுத்தகிருஷிகப்பகுதி அதிகாரிகள் சொல்லும் யோசனைகளை விவசாயிகள் கையாளுவது நல்லது".

காரியாதிகாரி திரு. டி. முருகேசம்பிள்ளை பேசுகையில், இணுவில் ஜோதி இளைஞர் விவசாயக்கழகத்தின் பணி இப்பிரிவிலேயே முன்மாதிரியாக விளங்குகின்றதென்றும் தொடர்ந்தும் நல்ல பணிகளை இக்கழகம் செய்யுமென நம்புவதாகவும் குறிப்பிட்டார்.

வித்துவான் இ திருநாவுக்கரசு, கிருஷிக போதனாசிரியர் திரு கே அப்புத்துரை உட்பட மற்றும் பலர் பேசினர். பம்பாய் வெங்காயச் செய்கையை இக்கழகம் பெருமளவில் மேற்கொள்ளுவதெனவும், சிகரட் புகையிலைச் செய்கையை அபிவிருத்தி செய்வதென்றும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.





திரீ கொயின்ஸ்

சந்தேகத்திற்கே யிடமில்லாத உன்னத லாகர்.

உண்மையான லாகரின் சுவை எப்படியிருக்கவேண்டுமோ அப்படியான சுவையுடையது "திரீ கொயின்ஸ்"......

உலகத்திலேயே சிறந்த மோலற் — ஹொப்ஸ் ஆகியனவும், இலங்கையின் மிகச் சுத்தமான தண்ணீருங் கொண்டு, வடிதொழிலின் உயர்ந்த தரங்களுக்கமைய முறைப்படி வடிக்கப்பட்டு, பக்குவம்பண்ணப்படுகிறது திரீ கொயின்ஸ்.

குளிர்ந்த திரீ கொயின்ஸ் லாகரைப் பரிமாறி உங்களையும் உங்கள் விருந்தினரையும் கௌரவியுங்கள். அது அதிசயிக்கத்தக்க திருப்தி தருவதைக் காண்பீர்கள்

மெக்கலம் புறூவெறிஸ் (சிலோன்) லிமிடெட்

விநியோகிஸ்தர்கள் :- ஷாவலாஸ் அன் கெட்ஜஸ் லிமிடெட், கொழும்பு 3.



எனக்கு மிகவும் பிரியமானது



CEYLON CHOCOLATES LTD

கன்டொஸ்

உயர்ந்த ரகச் சொக்கலேற்று




ஏகவிநியோகஸ்தர்கள்:

ஷோ வலஸ் அன் ஹெஜெஸ் லிமிட்டெட், கொழும்பு - 3.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "கல்வித்துறையில் மேற்கு ஜெர்மனியை பின்பற்றவேண்டும்"

## மகாஜனக் கல்லூரி பரிசளிப்பு விழாவில் காரியாதிகாரி கருத்து

தெல்லிப்பழை, ஞாயிறு 'இலங்கையின் சுதந்திரத்திற்கு அரசியல் வாதிகளை விட கல்வித்துறையில் ஈடுபட்ட அறிஞர்களே அடி கோலியிருக்கிறார்கள்' என்று வலி வடக்கு காரியாதிகாரி திரு டி. முருகேசபிள்ளை தெல்லிப்பழை மகாஜனக்கல்லூரி ஆரம்ப பாடசாலைப் பரிசளிப்பு விழாவில் உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி ஆரம்பபாடசாலைப் பரிசளிப்பு விழா கல்லூரி மண்டபத்தில் கல்லூரி அதிபர் திரு தெ. து. ஜெயரத்தினம் தலைமையில் நடைபெற்றது.

காரியாதிகாரி திரு டி. முருகேசம்பிள்ளை பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு மேலும் பேசியதாவது:

இலங்கையின் சுதந்திரத்திற்கு அடிகோலியவர்கள் அரசியல் வாதிகளா அல்லது கல்வித் துறையில் ஏராளமான கஷ்டங்களுக்கும் எதிர்ப்புகளுக்குமிடையே துணிந்து பெரிய கல்விநிலையங்களை நிறுவியவர்களா என்பதனைச் சிந்திக்க வேண்டும்.

பிரித்தானியர் காலத்தில் கல்வி கிறிஸ்தவசமய குருமாரின் ஆதிக்கத்தில் இருந்து வந்தது. அக்காலத்தில் சைவப் பாடசாலைகளோ அல்லது சைவ ஸ்தாபனங்களோ நிறுவப்படுவதற்கு அரசாங்கத்தின் உதவி இல்லை. பொதுமக்களின் ஆதரவும் குறைவு மிஷனரிமாரின் எதிர்ப்பும் அதிகமாக இருந்தது. இப்படியான சூழ்நிலையில் மகாஜனக்கல்லூரியை 60 ஆண்டுகளுக்கு முன் ஆரம்பித்து வளர்த்த பெருமைக்குரியவர்களின் செயல் என்றும் பாராட்டத் தக்கது.

உண்மையாக கல்வித்துறையில் தமிழ் மக்களின் உணர்ச்சியை தட்டி எழுப்பி நல்லசமுதாயம் உருவாக உதவியவர்களே இலங்கையின் சுதந்திரத்திற்கு அடி கோலினர்.

சைவப்பாடசாலைகள் பிள்ளைகளின் சொந்த சமயத்தைப் படிப்பிப்பது மட்டுமல்லாது அவர்கள் தங்களது சமயத்தில் நம்பிக்கை உள்ளவர்களாகவும் ஆக்கவேண்டும். சமய ஆசாரப்படி வாழ்க்கை நடத்தப் போதிப்பதும் சிறந்த தொண்டாகும். முற்காலத்தில் இப்படியான சைவப் பாடசாலைகள் இல்லாத காரணத்தால் பிள்ளைகள் வேறுசமயத்தைப் பற்றி படிக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. இதனால் ஒரு சமயத்தையும் படிக்கமுடியாத நிலை ஏற்பட்டது. இதன் பலனாக தன் சமயமும் தெரியாது பிறர் சமயமும் நன்கு தெரியாது சென்ற பல தலைமுறையினர் வாழ்ந்தனர். தற்போது எங்கள் சமூகத்தில் காணப்படும் குழப்பங்கள் இக்காரணத்தினால் தான் உண்டுபட்டன என்று சொல்லலாம்.

பாடசாலைகள் யாவற்றையும் அரசாங்கம் பொறுப்பேற்று தேசிய மயமாக்கி கல்வி போதிக்க ஒழுங்கு செய்ததற்காக அரசாங்கத்திற்குப் பொதுமக்கள் நன்றி செலுத்த வேண்டும். இப்பெரிய பொறுப்பை திறம்பட நடத்த அரசாங்கத்திற்கு ஏற்பட்டுள்ள பணநெருக்கடி இடந்தராது. எனினும் பலவருடங்களில் இப்பொறுப்பு சிறப்பான முறையில் நிறைவேற்றப்படும்.

### மேற்கு ஜெர்மனி காட்டும் வழி

ஒவ்வொருபாடசாலைப் பெற்றோர்களும் ஒன்று திரண்டு தங்கள் பாடசாலைகளின் தேவைகளைப் பூர்த்தி செய்ய முன்வர வேண்டும். கல்லூரி அதிபர்களுக்கும் பாடசாலை ஆசிரியர்களுக்கும் பெற்றோர்கள் உறுதுணையாக இல்லாவிடில் பாடசாலைகள் திறம்படச்செயல்பட முடியாது. பெற்றோர்கள் தமது பிள்ளைகளின் கல்வி நல்லமுறையில் நடக்கவேண்டுமென விரும்பினால் இந்த ஒத்துழைப்பை நல்கி கொடுக்க வேண்டும்.


கல்வித்துறையில் மேற்கு ஜெர்மனி கையாளும் முறையை இந்த நாட்டின் கல்வித்துறை நிபுணர்கள் கவனிப்பது நன்று. மேற்கு ஜெர்மனியில் உள்ள ஒவ்வொரு கல்லூரியிலும் விஞ்ஞான கூடங்கள் இருப்பதுபோன்று தொழிற் கூடங்களும் அமைக்கப்பட்டிருக்கின்றன. இந்த ஒழுங்கின்படி ஒவ்வொரு மாணவனும் இப்பாடசாலையில் கடைசி வகுப்பில் சித்தியடைந்து வெளியேறும்போது அவன் தெரிவுசெய்த தொழிலிலும் திறமை பெற்றுக்கொள்ளுகின்றான். இதனால் பாடசாலைக் கல்வி முடிந்ததும் மாணவன் தனது வாழ்க்கைக்குரிய தொழிலைத் தொடர்ந்து செய்யக்கூடியதாக இருக்கின்றது. இக்காரணத்தால் மேற்கு ஜெர்மனியில் வேலையில்லாத திண்டாட்டம் என்ற பேச்சுக்கே இடமில்லை.

20 ஆண்டுகளுக்கு முன் இரண்டாவது மகாயுத்தம் முடிந்தபோது ஜெர்மன் தேசம் அடைந்த அழிவு அனைவர்க்கும் தெரிந்ததொன்றே. விசேஷ கல்வி முறையை அனுஷ்டித்த காரணத்தால் 20 ஆண்டுகளுள் உலகத்தின் செல்வம் கொழிக்கும் நாடுகளில் ஒன்றாக அது மிளிர்கின்றது. இத்தகைய கல்விமுறையை நமது நாட்டிலும் நாம் கையாண்டால் எமது நாட்டின் முன்னேற்றம் சிறப்புறும்."

கல்லூரி அதிபர் தெ. து. ஜெயரத்தினம் தமது தலைமையுரையில் கூறியதாவது:

மகாஜனக் கல்லூரிப் பெற்றோர்கள், கல்லூரி ஆரம்பிக்கப்பட்ட காலந்தொட்டு இன்று வரை பூரண ஒத்துழைப்பு அளித்துள்ளனர். இக்காரணத்தினால் இக்கல்லூரி சிறந்த கல்லூரிகளில் ஒன்றாக விளங்குகிறது. மகாஜனக் கல்லூரி தனது பெயருக்குப் பொருத்தமாக உண்மையாகவே மகாஜனங்களின் கல்லூரியாகவே இருந்து வருகிறது. ஆனால் பாடசாலையை அரசாங்கம் பொறுப்பேற்ற பின் பெற்றோர்களின் கடமை மிகப் பெரிதாகிவிட்டது. பெற்றோர்கள் தமது கடமையை நினைந்து இக்கல்லூரிக்கு மேலும் ஆதரவுதரவேண்டும்.

திருமதி அ. முருகேசம்பிள்ளை பரிசில்களை வழங்கினார். திருமதி சச்சிதானந்தம் நன்றி கூறினார். மாணவர்களின் கலைநிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

# சைலால்

முகப்பரு, சொறிசிரங்கு கரப்பான், கக்கூஸ்பத்து, வெட்டுக்காயம், வேனல் கட்டி, தீப்பட்டபுண், சேத்துப்புண், பித்தவெடிப்பு முதலிய சரும வியாதிகளைக் குணப்படுத்துகிறது. துணிகளில் கறைபிடிக்காது.

தயாரிப்பாளர்கள் ராதா புரடக்ஸ்

எஸ். சுப்பிரமணியம் அன் கோ.




## இப்பொழுது திரையிடப்படுகிறது!

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) நவா (கும்பனித்தெரு)

வீனஸ் (மட்டக்களப்பு) விஜிதா (ஹட்டன) தீவொலி (நுவரேலியா)

வெலிங்டன் (யாழ்ப்பாணம்)

தினசரி பிற்பகல் 2-30, 6-30, 9-30



★ சிவாஜி கணேசன்
★ எஸ்.எஸ். ராஜேந்திரன்
★ விஜயகுமாரி

மற்றும் பலர் நடித்த

# பச்சை விளக்கு


குறிப்பு இல: எல். எ, 1182

காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460) 7-ம் பிரிவின்படி அறிவித்தல்

கீழ்க்காணும் அட்டவணையில் விபரிக்கப்பட்ட காணியை எடுக்க அரசாங்கம் உத்தேசித்திருக்கிறது. மேலதிக விபரங்களுக்கு 1965-ம் ஆண்டு மே மாதம் 21-ந் திகதி பிரசுரிக்கப்பட்ட இலங்கை அரசாங்க கசற் பத்திரிகை இலக்கம் 14,404 (பகுதி III-ல்) பார்க்கவும்,

அட்டவணை

பிரிவுக் காரியாதிகாரியின் பகுதிப் பெயர்: கராச்சி காரியாதிகாரியின் பிரிவு
கிராமத்தின் பெயர்: பெரிய பரந்தன்.
காணியின் பெயர்: கொல்லனுறுவயல்,
ஆரம்பப்பட இல: ஆரம்பபட இல. யா 4 இல்
துண்டு இல: 1-ம், 2-ம், 3-ம் துண்டுகள்.

ஆ. பெருமையினார்,
உதவி அரசாங்க அதிபர்,
யாழ்ப்பாண மாவட்டம்,

குறிப்பு இல; எல். எ. 1224

காணி எடுத்தற்சட்டம் (அத்தியாயம் 460) 7-ம் பிரிவின்படி அறிவித்தல்

கீழ்க்காணும் அட்டவணையில் விபரிக்கப்பட்ட காணியை எடுக்க அரசாங்கம் உத்தேசித்திருக்கிறது. மேலதிக விபரங்களுக்கு 1965-ம் ஆண்டு மே மாதம் 21-ந் திகதி பிரசுரிக்கப்பட்ட இலங்கை அரசாங்க கசற் பத்திரிகை இலக்கம் 14,404 (பகுதி III-ல்) பார்க்கவும்;

அட்டவணை

பிரிவுக் காரியாதிகாரியின் பகுதிப் பெயர்: வலிகாமம் கிழக்குக் காரியாதிகாரியின் பிரிவு.
கிராமத்தின் பெயர்: இருபாலை.
காணியின் பெயர்: செம்மணித்தரவை, தாளையடித்தலைமடை, செம்பணிவயல், சாளியகொட்டி அல்லது சாளின் கொட்டி.
ஆரம்பப்பட இல: யா. 2 இல்.
துண்டு இல: 1-ம், 2-ம், 3-ம், 4-ம், 5-ம் துண்டுகள்.

ஆ. பெருமையினார்,
உதவி அரசாங்க அதிபர்,
யாழ்ப்பாண மாவட்டம்.


### பயிற்றப்பட்ட தமிழாசிரியர்கள் பட்டதாரிகளாக

இராமநாதன் கலைக்கழகம் உதவும் வகுப்புக்கள்

டி கழகத்தின் ஆதரவில் நடைபெறும் G A Q. வகுப்புக்கான விண்ணப்பங்கள் இன்னும் ஏற்றுக்கொள்ளப்படும். வகுப்புக்கள் ஜூலை முதல் வாரத்தில் ஆரம்பமாகும். இப்பொழுது வகுப்பிலுள்ளவர்கள் தொடர்ந்து பயிலலாம். விண்ணப்பிக்கவேண்டிய திகதி B A. வகுப்புக்களுக்கும் விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும்.

விபரங்களுக்கு க. கதிரவேல் ஆசிரியர். இணுவில் என்ற முகவரியுடன் தொடர்பு கொள்க.

செ. மயில்வாகனம்,
முகாமைமுதல்வர்,
சுன்னாகம் 23-5-65 180

### தேவை

சிற்றுண்டிச் சாலை நடாத்துவதற்கு ஒரு மனேஜரும் இரு சமையல் தொழிலாளரும் தேவை. மனேஜர் J.S.C சித்தியடைந்தவராயும் 22 வயதுக்கு மேற்பட்டவராயும் இருத்தல் வேண்டும். கூட்டுறவுப் பயிற்சி, முன் அநுபவம் விசேஷ தராதரமாய் கவனிக்கப்படும் பிணை ரூபா 1000/- சம்பளம் ரூபா 75/-ம் போசனமும் ஆரம்பத்தில் வழங்கப்படும். சமையல் தொழிலாளர் முன் அனுபவத்தையும் கோரும் சம்பளத்தையும் குறித்து விண்ணப்பிக்கவும்; விண்ணப்பங்கள் 31-5-65 காலை 10 மணிக்கு முன்னதாக கிடைக்கக் கூடியதாக காரியதரிசி, பரந்தன் இரசாயன ஊழியர் கூட்டுறவு நலன்களுக்குச் சங்கம் இரசாயனத் தொழிற்சாலை பரந்தன், என்ற விலாசமிட்டு அனுப்பப்படல் வேண்டும்.

ச. அந்தோனிப்பிள்ளை
தலைவர். 304

### வகுப்புகள்

விண்ணப்பங்கள் தற்பொழுது ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. யுனிட்டெட் இன்ரிரியூற்ஸ், 107, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம் 296

REGAL - JAFFNA
NOW SHOWING
Audie Murphy
in
SHOWDOWN
(Thrilling Action Film)



S. R. S.
ஜவுளி மாளிகையில்
சேலை ஒன்று 11-00 ரூபா தொடக்கம்
பலவிலைகளில் பெற்றுக்கொள்ள நல்ல சந்தர்ப்பம்.
லங்கா சேலைகளும்
எமது சொந்த கைத்தறியில் தயார் செய்யப்பட்ட
நெசவு சேலைகளும்
ஏராளமாக விற்பனைக்கு உள்ளன.
மொத்தமாக வாங்கும் வியாபாரிகளுக்கும் சங்கக் கடைகளுக்கும் விசேஷ கமிஷன் உண்டு
எஸ். ஆர். செல்லத்துரை
316, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.
போன்: 296.

### வரி விளம்பரம்

கைத்தொழில் ஸ்தாபனங்களுக்கு காணியும் கட்டிட வசதியும் உண்டு. விபரங்களுக்கு: சிலோன் டிரேடிங், யாழ்ப்பாணம். 299

### விற்பனைக்கு

நல்ல நிலைமையில் உள்ள அரைக்கும் இயந்திரமும் 1 1/2 கோஸ் மோட்டரும் விற்பனைக்குண்டு. நேரில் பார்வையிடலாம்: K S சுப்பையா, சந்தை ஒழுங்கை, சுன்னாகம். 302

யாழ்ப்பாணம் பிரதான வீதியில் 13/4 பரப்புக் காணியும் வீடும் விற்பனைக்குண்டு: தொடர்புகொள்ளவும்: ஏ. சோமர் வன்னியசிங்கம், புரக்டர், பிரதான வீதி, யாழ்ப்பாணம். 300

நல்ல நிலைமையிலுள்ள ஒஸ்ரின் 8, CY தொடரிலக்க முன்னைய கார் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும். திருமதி எஸ். ஜே. குணசேகரம், கோப்பாய். 298

பெலமான புது கோழிக் கூடுகள் விற்பனைக்கு இருக்கின்றன. 6 அடி X 4 அடி. வாடிவீடு. நீர்வேலி. 291

### கல்வி

பி. ஏ. ஜி. ஏ. கியூ, ஜி. சி. ஈ. (உயர் சாதாரண) தரங்களிலே விஞ்ஞானம், தமிழ், ஆங்கில வர்த்தக வகுப்புக்கள், சிங்களம்; மத்திய எழுதுவினைஞர் வகுப்பு அப்போதிக்கரிப் புதுமுக வகுப்பு ஆசிரிய கலாசாலைப் பிரவேச வகுப்புகளுக்கு விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. யாழ். டியூட்டோரியல்கல்லூரி கைலாசபிள்ளையார் கோவிலடி, நல்லூர்—யாழ்ப்பாணம். 279

### மனேஜர் தேவை

கோண்டாவில் ப. நோ. கூ. சங்கத்துக்கு மனேஜர் தேவை. தகமை S S C. தராதரத்துடன் கூட்டுறவுப் பயிற்சியும் விரும்பத்தக்கது. வயது 35க்குட்பட்டவர்கள் சமீபத்திற் பெற்ற இரு நற்சாட்சிப்பத்திரங்களுடன் 3-6-65-க்கு முன் பதிவுத் தபால்மூலம் விண்ணப்பிக்கலாம். பிணை ரொக்கம் ரூபா 1000/-, ஆதனம் ரூபா 2000/- சம்பளம் மாசம் ரூபா 100/- ஆரம்பம். முகவரி: சி. பொன்னம்பலம், கௌரவ காரியதரிசி, கோண்டாவில் ப. நோ. கூ. சங்கம், கோண்டாவில். 301


மாஸ்கோ, மே 23 ரஷ்யாவிலிருந்து புறப்படு முன், இந்தியப் பிரதமர் சாஸ்திரி விடுத்த நன்றிச் செய்தியை "பிராவ்டா" பத்திரிகை முதல் பக்கத்தில் பிரபல்யமாகப் பிரசுரித்திருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசிய அரசாங்கம் மூலம்

# உரிமை கிடையாது

## சமசமாஜ (புரட்சிவாத) பிரமுகர் காராளசிங்கம் பேச்சு

யாழ்ப்பாணம், ஞாயிறு

'தேசிய அரசாங்கத்தின் மூலம் தமிழ் பேசும் மக்களுக்கு எந்தவித நன்மையும் கிடைத்துவிடாது. ஏனெனில், பல தரப்பட்ட கொள்கைகளையுடையவர்களும், கடந்த காலத்தில் தமிழினத்திற்கு எதிராக இருந்தர்களும் தேசிய அரசாங்கத்தில்அங்கம்வகிக்கின்றனர்கள். இந்த நிலையில் தேசியஅரசாங்கத்தின்மூலம் நமது உரிமைகள் கிடைக்குமென எப்படி எதிர்பாக்க முடியும்?'' என்று யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மண்டபத்தில் நேற்றிரவு ''தேசிய அரசாங்கமும் தமிழ் பேசும் மக்களும்'' என்னும் பொருள் பற்றி திரு. வை. காராளசிங்கம் பேசும்போது குறிப்பிட்டார்.

சமசமாஜ புரட்சிவாத வாலிபர் சம்மேளனத்தின் சார்பில் நடைபெற்ற இக்கூட்டத்திற்கு திரு. வி. பொன்னையா தலைமை வகித்தார். திரு, காராளசிங்கம் மேலும் கூறியதாவது:

இந்த நாட்டில் ஒரு புரட்சி மூலந்தான் சோல்பரி அரசியல் திட்டத்தை மாற்றி அமைக்கமுடியும். அரசாங்கம் நாடு முழுவதும் இயங்குகின்றது. இந்த நாட்டில் அரசாங்கத்தை எதிர்த்து வெற்றிபெறவேண்டுமானால் முதலில் நாட்டின் பெரும்பான்மைகக்களின் ஆதரவை பெறவேண்டும்.

சமஷ்டி கட்சி, இரு மாகாணங்களில் மட்டும் இயங்குவதால் அரசாங்கத்தை எதிர்த்து வெற்றி காண முடியாமலிருக்கிறது. சமஷ்டி கட்சி பெரிய நோக்கத்தை முன்வைத்தே ஆரம்பிக்கப்பட்டது.சமஷ்டி ஆட்சியை இந்நாட்டில் நிறுவ வேண்டும் என்பதற்காகவே இக்கட்சி நிறுவப்பட்டது. ஆனால் இன்று நடைபெறுவது ஒற்றை ஆட்சிதான். இந்த ஒற்றையாட்சியில் சமஷ்டி ஆட்சியை விரும்பும் சமஷ்டி கட்சியினர் தேசிய அரசாங்கம்அமைக்கஆதரவு அளித்துள்ளார்கள்.

சமஷ்டிக்கட்சிக்கு ஒரு சுதந்திரமான வழிகிடையாது. தமிழ்மக்களின் உரிமைகளைப் பறித்த ஐக்கிய தேசியக்கட்சியையும் சிறிலங்கா சுதந்திரக்கட்சியையும் மாறி மாறி ஆதரிப்பதிலேயேநாட்களைசமஷ்டிக் கட்சியினர் கழித்துவருகிறார்கள். சமஷ்டிக்கட்சியினர் தேசிய அரசாங்கத்தை ஆதரித்ததின் காரணம் என்ன? வேறு மார்க்கமில்லாதபடியால்தான் ஆதரித்தனர். தேசிய அரசாங்கத்தின் மூலம் தமிழ்பேசும் மக்களுக்கு எந்தநன்மையும் கிடைத்துவிடாது. ஏனெனில், தேசிய அரசாங்த்தில் பல கட்சிகள் அங்கம் வகிக்கின்றன.

தேர்தல் முடிந்து 2 மாத காலம் சென்று விட்டது. இந்த 2 மாத காலத்தில் தேசிய அரசாங்கம் பிரச்னைகளை தீர்க்க என்ன நடவடிக்கை எடுத்துள்ளது என்பதை நீங்களே அறிவீர்கள்.

1947-ம் ஆண்டு இந்தியத் தமிழர்களின் பிரஜா உரிமையை பறித்து அவர்களை அரசியல் அநாதைகளாக்கிய ஐக்கிய தேசிய கட்சியுடன் இன்று சமஷ்டிக் கட்சி கூட்டுச்சேர்ந்துள்ளது. இதனால் தமிழரின் உரிமையப்பெற்று விடமுடியுமா? பிரஜா உரிமை சட்டத்தில் ஏற்பட்ட கருத்து வேறுபாடினால்தான் ஐக்கிய தேசிய கட்சிக்கு ஆதரவளிக்கக்கூடாதுஎன்று தமிழ்க் காங்கிரஸிலிருந்து வெளியேறி சமஷ்டி கட்சி அமைத்தவர்கள் இன்று அதே ஐக்கிய தேசிய கட்சியை ஆதரிக்கின்றனர்.

தேசிய அரசாங்கம் அதிக நாட்கள் நீடிக்காது என்பதை அறிந்தே மந்திரி சபையில் சமஷ்டிக்கட்சி சார்பில் திரு. திருச்செல்வத்தை மந்திரிப்பதவி ஏற்கச்செய்துள்ளார்கள். தேசிய அரசாங்கம் தோல்வியடைந்ததும், சமஷ்டிக் கட்சியினர் உங்கள் முன்னிலையில்வந்து முழுக்குற்றத்தையும், திரு. திருச்செல்வம் மீது சுமத்தி தாங்கள் தப்பிக்கொள்வார்கள்.

சமஷ்டிக் கட்சியினருக்கு வாக்குறுதிகள் அளிப்பதன் மூலம் வசப்படுத்தி விடலாம் என்பது, திருமதி சிறிமாவுக்ும், டட்லி சேனநாயக்காவிற்கும் தெரியும் அதனால்தான் தேர்தல் முடிந்தபின் கூடிய வாக்குறுதிகள் கொடுக்க ஐக்கிய தேசியக் கட்சி முன்வந்தது. வாக்குறுதிகளை நிறைவேற்றுவது பற்றி அக்கறை கிடையாது. ஏனெனில் வாக்குறுதியை முறித்தால், சமஷ்டிக்கட்சி எதுவும் செய்யமுடியாது என்பது அரசாத்துக்குத் தெரியும். கடந்தகாலத்தில் ஐக்கிய தேசிய கட்சியும் சிறிலங்கா சுதந்திரக்கட்சியும் தமிழ் பேசும் மக்களை அடக்கி ஒடுக்கி வந்தது. ஆதலால் இனிமேல் தமிழ் மக்கள் செல்ல வேண்டிய வழியாது?

இடதுசாரிகளின் மூலம் தமிழ்மக்கள் இந்நாட்டில் சகல உரிமைகளும் பெற்று வாழமுடியும். இடதுசாரிகள் என்றதும் டாக்டர் என். எம். பெரேராதான் கடந்த காலத்தில் உங்கள் மனதில்வரும். ஆனால்இன்று டாக்டர் பெரேரா தமிழ் மக்களுக்கு மட்டுமன்றி தொழிலாளருக்கும் பெரும் அநீதி இழைத்து விட்டார். கடந்த மே தினத்தில், தமிழ் மக்களுக்காக கடந்த காலத்தில் பாடுபட்ட டாக்டர் பெரேரா வகுப்புவாத கூச்சலுக்கு ஆதரவளித்தார்.

புரட்சி இடதுசாரிகளின் கொள்கைகள் மூலம்தான் உங்கள் பிரச்னைகளை தீர்க்க முடியும். புரட்சி இடதுசாரி மூலம்தான் தமிழ்பேசும் மக்கள் முன்னேறலாம்.

---

## ஓய்வு பெற்ற அதிபருக்கு பாராட்டு

உடுப்பிட்டி, ஞாயிறு

வடமராட்சி வடமத்திய கல்லூரியின் அதிபராகக் கடமையாற்றி [illegible] திரு [illegible] ஓய்வு பெற்றதைத் தொடர்ந்து மேற்படி கல்லூரியின் ஆசிரியர்களும் மாணவர்களும் சேர்ந்து பிரிவு உபசாரமளித்தனர்.

பண்டிதர் சி. கிருஷ்ண பிள்ளை உட்பட பலர் அதிபரைப் பாராட்டிப் பேசினர் பரிசில்களும் வழங்கப்பட்டன. தேநீர் விருந்தும் நடைபெற்றது.

---

தெல்லிப்பழை, ஞாயிறு

யாழ்ப்பாணம் கிருஷிகப் பகுதியினர் மாவிட்டபுரத்தில் பசுக்களுக்கு [illegible] சினைப்படுத்தும் முயற்சியை ஆரம்பித்துள்ளனர். மாவிட்டபுரம் சிகரட் புகையிலைச் சங்கக்கட்டிடத்தில் இந்நிலையம் அமைக்கப்பட்டுள்ளது.

---

## குடிசை தீப்பற்றியது

யாழ்ப்பாணம், ஞாயிறு

மண்டைதீவு கிழக்குத் தெருவைச்சேர்ந்த பொன்னுத்துரைகாந்தமலர் என்பவருடையகுடிசை தீப்பற்றிக் கொண்டதால் வீடு எரிந்து சாம்பராகியது.

இரண்டு குழந்தைகளுக்குந்தாயர்கிய இவர் உதவியற்ற நிலையில் இன்னொருவர் வளவில் குடிசை கட்டி வாழ்ந்து வந்தவர்.

இனந்தெரியாத நபர்களின் நாசவேலையாக இது இருக்குமென சந்தேகிக்கப்படுகிறது. இதுபற்றிப்புலன் விசாரணை நடைபெறுகிறது.

---

## பதவி அகற்றப்படுமோ?

நல்லூர், ஞாயிறு

யாழ்ப்பாண மேயர் திரு. எஸ். சி. மகாதேவா மீது நம்பிக்கையில்லாத்தீர்மனம் கொண்டுவர ஏற்பாடுகள் நடைபெற்று வருவதாகத் தெரிகிறது. இரு கோஷ்டியைச்சேர்ந்த மாநகரசபை அங்கத்தினர்கள் இம்முயற்சியில் ஈடுபட்டுள்ளனர்.

மேயர் திரு. மகாதேவா மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம்கொண்டு வருவதில் திரு. ஏ. ரி. துரையப்பா, திரு. டி. எஸ். துரைராஜா கோஷ்டியினர் ஈடுபட்டிருப்பதாகவும் இரண்டொரு தினங்களில் பதவி அகற்றக் கோரும் தீர்மானம் கொண்டுவரப்படுமெனவும் அறியப்படுகிறது.

---

## அதிக அரிசி பெற முயற்சி

பம்பலப்பிட்டி, சனி

தாய்லந்து, பர்மா ஆகிய நாடுகளிலிருந்து அதிக அளவு அரிசியைப் பெறுவதற்கு வழிவகுக்கு முகமாக உணவுக்கமிஷனர் திரு. பி ஏ. சில்வா இம்மாதமுடிவுக்குள் மேற்படி நாடுகளுக்கு செல்லவிருக்கிறார்.

---

## பதவி காலி!

நல்லூர், ஞாயிறு

யாழ்ப்பாண மாவட்ட காரியாலய காரியாதிகாரி பதவி சமீபத்தில் நிரப்பப்படமாட்டாது என அறியப்படுகிறது. தற்போது காரியாலய காரியாதிகாரி பதவி காலியாக உள்ளது. இக்காரியாதிகாரியின்பதவிக்கு அனுபவம் வாந்த இரு காரியாதிகாரிகளின் பெயர்கள் அடிபட்டனவாயினும்தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகாரியாலயகாரியாதிகாரி பதவியை நிரப்பும்யோசனை இருப்பதனைக் காட்டுவதாக இல்லை.

காரியாலய காரியாதிகாரியின் கடமைகள் [illegible] உள்ள உயர் அதிகாரிகளிடம் தற்போது பகிர்ந்தளிக் கப்பட்டுள்ளது.

---

## 'நாட்டின் மூலப் பொருள் மனித சக்தியே'

### யாழ். கல்லூரியில் மந்திரி திருச்செல்வம் கருத்து

வட்டுக்கோட்டை, ஞாயிறு

பயிற்றப்பட்ட ஆசிரியர்களுக்கான பொதுக்கலை, பொது விஞ்ஞானத் தகுதிகாண் பரீட்சைகளுக்கான வகுப்புக்களை தேறுக்காலைமந்திரிதிரு திருச்செல்வம் சம்பிரதாயமுறைப்படி குத்துவிளக்கேற்றித் திறந்துவைத்தார்.

கல்லூரித் தலைவர் வண. கலாநிதி எல் ஜே பங்கரும், வட்டுக்கோட்டைப் பாராளுமன்ற உறுப்பினர் திரு அ. அமிர்தலிங்கமும் முன்னிலை வகித்திருந்தனர். வகுப்புக்களை ஆரம்பித்து வைத்து கௌரவ அமைச்சர் பேசியபொழுது குறிப்பிட்டதாவது:-

''கல்லூரி என்னை அழைத்ததற்கு நான் நன்றிதெரிவித்துக் கொள்ளுகின்றேன். யாழ். கல்லூரியின் சேவையை நான் பாராட்டாமல் இருக்கமுடியாது. படித்தோர தொகை கூடிய நாடுகளில் யாழ்ப்பாணமும் ஒன்றாகும். நூற்றுக்கு ஒருவர் பட்டதாரியாக இருக்கும் நாட்டை யாழ்ப்பாணத்தைத் தவிர வேறெங்கும் நாம் காண முடியாது. யாழ்ப்பாணம் கல்வித்தரத்தில் இலங்கையில் முதன்மையாக விளங்குவதற்கு பெருமளவில் தொண்டுபுரிந்த ஸ்தாபனங்களில் யாழ்ப்பாணக்கல்லூரி முதலிடத்தை வகிக்கின்றது. யாழ்ப்பாணக் கல்வியின் வளர்ச்சிக்கு அமெரிக்க மிஷனரிகள் செய்த தொண்டை நாம் மறக்கமுடியாது. கடந்த ஒன்பது வருஷகாலமாக எமது அரசாங்கம் பின்பற்றிவந்த கல்விக்கொள்கை யாழ்ப்பாணத்தின கல்வித் தரத்தைக் குறைத்துகல்விதரம்குறைந்த இலங்கையின் ஏனைய பாகங்களுடன் சம படுத்துவதற்குமுனைந்ததே தவிர எமது கல்வித்தரத்தை உயர்த்துவதற்கு உழைக்கவில்லை. ஆனால் நான் அமைச்சராகவிருக்கும் தேசிய அரசாங்கம் மேற்கூறப்பட்ட குறுகிய மனப்பான்மை உடையதாக இருக்கமாட்டாது.''

மேலும் மந்திரி தொடர்ந்து பேசுகையில் தெரிவித்ததாவது:- ''400 ஆண்டுகளாக எம்மை ஆட்சி புரிந்த அந்நியர்கள் ஆட்சி எமது சக்தியை உறிஞ்சிவிட்டது இதன்காரணமாக எமக்காக மற்றவர்கள் உழைக்கவேண்டுமென எதிர்பார்க்கின்றோம். எமக்காக நாம் உழைக்கும் மனத்திடம் உடையவர்களாக மாறவேண்டும் எமது நிலை உயர்வடைய எமது கல்வித்தரம் உயரவேண்டும் ஆகவே தமிழ் மக்களுடைய எதிர்கால உயர்தரக்கல்விக்கு மக்கள் யாழ்ப்பாணக்கல்லூரியிலேயே தங்கியிருக்கவேண்டும் அவர்களின் உதவியின்றி நாம் முன்னேற முடியும். ஒரு நாட்டின் முன்னேற்றத்திற்குத் தேவையான இயற்கை மூலப்பொருள் மனித சக்தியே. அத்தகைய மனித சக்தி - ஆற்றல்-விவேகம் யாழ்ப்பாண மக்களிடையே உண்டு அதைப்பயன்படுத்தினால் நல்ல முறையில் முன்னேற முடியும். எந்தவிதமான மூலப்பொருட்களுமில்லாமல் முன்னேறிய நாடுகளில் முதலிடம் வகிப்பது யப்பான். மின்சாரத்தைத் தவிர ஏனைய மூலப்பொருட்கள் எதுவுமின்றி, தேவையான மூலப்பொருட்களை வெளி நாடுகளிலிருந்து இறக்குமதி செய்து இன்று முதல்தரமைத் தொழில் நாடாக யப்பான் விளங்குவதின் மர்மம் என்ன? அங்குள்ளவர்களது விவேகமும், மனித ஆற்றலைச்சரியான முறையில் பயன்படுத்தியது மேயாம்.

---

## "சனசமூகசமாஜத்தின் சேவை"

வவனியா ஞாயிறு

"இலங்கைக்கு' சனசமூக நிலையச் சமாசம் புதிதல்ல, இலங்கை இந்திய சரித்திரத்தைப் புரட்டிப்பார்த்தால் பண்டைக்காலத்தில் இப்படியானசனசமூகநிலையங்களால் எத்தனையோ காரியங்களைச் சாதித்தார்கள் என்பதை அறியலாம் இச்சனசமூக சமாஜத்தால் இன்று இலங்கையில் அரசாங்கத்தால் சாதிக்கமுடியாத திட்டத்தை நாம்சாதிக்க முடியும் நமது நாட்டில் இன்று வேலையில்லாப்பிரச்னை சாதி மத பாகுபாடு போன்ற எத்தனையோ தலைதூக்கித்தாண்டவமாடிக் கொண்டிருகிறது. இவை எல்லாவற்றையும் சுலபமாக சாதிக்க சனசமூகசமாஜம் அத்தியாவசியம்"

இவ்வாறு அண்மையில் வவனியா நகரசபை மண்டபத்தில் வவனியாமாவட்ட சனசமூக நிலைய அங்கத்தவர்கள் ஒன்று சேர்ந்து நடத்திய சனசமூக சமாஜ அங்குரார்ப்பணக்கூட்டத்தில் வவனியா நகரசபை தலைவர் ம பொன்னையா கூறினார் இக்கூட்டத்திற்கு வடபிரதேச உள்ளூராட்சி ஆணையாளர் திரு சிவராசா தலைமை வகித்தார்.

திரு. பொன்னையா தொடர்ந்து கூறியதாவது- இரண்டாம் மகாயுத்த காலத்தில் கூட்டுறவுச்சங்கங்கள், கிராம முன்னேற்றச் சங்கங்கள் ஆகியவை திரும்பவும் புத்துயிர் அளிக்கபபட்டு பல ஆக்க வேலையில் ஈடுபட்டன இன்று இலங்கையில் உள்ள சகல பிரச்னைகளையும் தீர்ப்பதற்கு சனசமூகசமாஜம் சார்பாக தனது கிளைச்சங்கங்களின் உதவியுடன் நாட்டின் பல பகுதிகளிலும் பல கைத்தொழில் ஸ்தாபனத்தைத் தொடங்கி அதன்மூலம் சகல பகுதி மக்களுக்கும் வேலை வாய்ப்பும் தகுந்த ஊதியமும் கிடைக்க வழி செய்யலாம்.

---

## 6வது ஆண்டு விழா

யாழ்ப்பாணம், ஞாயிறு

வண்ணை ஸ்ரீ காமாக்ஷி அம்பாள் கூட்டுப் பிரார்த்தனைச் சபையின் 6-வது ஆண்டு நிறைவுவிழா பிரம்மஸ்ரீ தி. கி, சீதாராம சாஸ்திரிகள் தலைமையில் நடைபெற்றது. அக்கருணம் விழாத்தலைவரால் ''பிரார்த்தனையின்விளக்கம்'' என்னும் உபந்நியாசமும், பிரம்மஸ்ரீ க. வை. ஆத்மநாத சர்மாவினால் "அன்னை வழிபாடு" என்னும் உபந்நியாசமும் சிறுவர் பேச்சு நிகழ்ச்சிகளும், பக்திப்பாட்டும் சபைமாணவரின் "மெய்ப்பொருள்நாயனர்" என்னும் நாடகமும் இடம்பெற்றன.

---

## கிராம முன்னேற்ற சங்க கூட்டம்

வவனியா, ஞாயிறு

புளியம்பொக்கனை கனகராயன்குளம் [illegible] ஆகிய கிராமங்களின் கிராம முன்னேற்றச் சங்கங்களின் ஆண்டுக்கூட்டம் திரு, செ கந்தையா தலைமையில் நடைபெற்றது

புதுவருட உத்தியோகத்தர் விபரம்:-

போஷகர்: திரு இ க சுப்பிரமணியம், தலைவர்: திரு அ சிற்றம்பலம், உபதலைவர்: திரு கா. தம்பு, காரியதரிசி: திரு வே மயில்வாகனம், உபகாரியதரிசி: திரு சி சிங்கராசா, பொருளாளர்: திரு க நாகலிங்கம் 4 பேர் கொண்ட நிர்வாக சபையும் தெரிவு செய்யப்பட்டது.

---

வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

---

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி [illegible] இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1965-ம் ஆண்டு மே மாதம் 24-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org